வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-மலர்விழி

தேதி 20.3.2026 நேரம் மாலை 6.10 மணி

-------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் தரமான மருத்துவ சேவை கிடைப்பதை உறுதி செய்ய மத்திய அரசு செயலாற்றி வருவதாக குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு தெரிவித்துள்ளார்.

விவசாயிகளின் விளை பொருட்களை குறைந்த பட்ச ஆதரவு விலையில் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவ்கான் தெரிவித்துள்ளார்.

நம் நாட்டில் அனைத்து சுத்தி கரிப்பு நிலையங்களிலும் போதுமான கச்சா எண்ணெய் இருப்பு இருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

புதுச்சேரியில் முதலமைச்சர் திரு ரங்கசாமி 2 இடங்களில் போட்டியிடுவதற்காக வேட்புமனுக்களை இன்று தாக்கல் செய்தார்.

முர்மு

நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் தரமான மருத்துவ சேவை கிடைப்பதை உறுதி செய்ய மத்திய அரசு செயலாற்றி வருவதாக குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு தெரிவித்துள்ளார். அவர் இன்று உத்தரப்பிரதேச மாநிலம் பிருந்தாவனத்தில் உள்ள ராமகிருஷ்ணா மிஷன் சேவா ஆஸ்ரம மருத்துவமனையில் புற்று நோயியல் பிரிவை இன்று திறந்து வைத்தார். அப்பகுதியில் புற்று நோய் பராமரிப்பு வசதிகளை மேம்படுத்தும் விதத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த மருத்துமனையில் புற்று நோயியல் பிரிவின் மேம்பட்ட கதிரியக்க சிகிச்சை மற்றும் அதிநவீன நோய் கண்டறிதல் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. நேற்று முதல் உத்தரபிரதேச மாநிலத்திற்கு 3 நாள் பயணம் மேற்கொண்டுள்ள குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, முன்னதாக பிரேமானந் ஜி மகராஜ் ஆசிரமத்திற்கு சென்றார். பின்னர் பிருந்தாவனத்தில் உள்ள நீப்கரோரி பாபாவின் சமாதிக்கு சென்று மலர் தூவி மரியாதை செலுத்தினார். இன்று மாலை முதியவர்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளின் பராமரிப்புக்காக பணியாற்றும் நல அமைப்பான வாட்சல்யா கிராமத்திற்கு செல்கிறார்.

*பிரதமர்-வாழ்த்து*

தாய்லாந்து நாட்டின் பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு அனுதின் சார்ன்விராகுலுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில் திரு அனுதின் உடன் இணைந்து நெருக்கமாக பணியாற்ற

ஆவலுடன் காத்திருப்பதாக குறிப்பிட்டுள்ளார். இந்தியாவிற்கும் தாய்லாந்திற்கும் இடையிலான பன்முக தன்மை வாய்ந்த உத்திசார் கூட்டாண்மையை இருவரும் இணைந்து மேலும் வலுப்படுத்துவோம் என்று பிரதமர் தெரிவித்துள்ளார். இருநாட்டு மக்களின் அமைதி, முன்னேற்றம் மற்றும் செழிப்பு ஆகியவற்றிற்கான பகிரப்பட்ட லட்சியங்களில் இந்தியாவும் தாய்லாந்தும் ஒன்றுபட்டு திகழ்வதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தமது பதிவில் பதிவிட்டுள்ளார்.

*சிவராஜ் சிங் சவ்கான்*

புதுடெல்லியில் இன்று மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நலத் துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவ்கான் நாட்டின் விவசாய நிலவரங்கள் குறித்து மூத்த அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டார். பல்வேறு மாநிலங்களில் பெய்த பருவம் தவறிய மழை மற்றும் ஆலங்கட்டி மழையினால் பயிர்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்த விவாதத்தைத் தொடர்ந்து ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இதுகுறித்த கூடுதல் தகவல்கள்.........

(வாய்ஸ்)

பருவநிலை மாற்றங்களால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வெகு விரைவாக கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் உடனடி ஆய்வுகளை மேற்கொள்ளவும் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும்

அதிகாரிகளுக்கு திரு சிவராஜ் சிங் சவ்கான் இந்தக் கூட்டத்தின் போது அறிவுறுத்தினார். விவசாயிகள் தங்கள் விளை பொருட்களுக்கு நியாயமான விலை பெறுவதை உறுதி செய்வதில் குறைந்த பட்ச ஆதரவு விலையில் கொள்முதல் பணிகள் தடையின்றி நடைபெறுவதற்கான அவசிய அறிவுத்தல்கள் இந்தக் கூட்டத்தின் போது வழங்கப்பட்டது. வரவிருக்கும் காரிப் பருவத்திற்கான நாட்டின் பல்வேறு பிராந்தியங்களில் மண்டல அளவிலான மாநாடுகளை நடத்த திட்டமிடப்பட்டு, இதன் மூலம் உள்ளூர் தேவைகளுக்கு ஏற்ப காரீப் பயிர்களுக்கான சிறந்த உத்திகளை வகுக்க இந்தக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

ே□ பி நட்டா

உலக வாய் நல தினம் இன்று கடைபிடிக்கப்படுவதை ஒட்டி, மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் திரு ஜேபி நட்டா விடுத்துள்ள செய்தியில் சுத்தமாக பல் துலக்குதல், சர்க்கரை உணவு கட்டுப்பாடு, வழக்கமான பரிசோதனைகள் போன்ற எளிய நடைமுறைகளின் மூலம் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதன் அவசியத்தை வலியுறுத்தி உள்ளார். சிறந்த வாய் வழி சுகாதார பழக்க வழக்கங்களை பொது மக்கள் முறையாக கடைபிடிக்க வேண்டுமென அறிவுறுத்தி உள்ள அவர் வாய் சுகாதாரம் ஒட்டு மொத்த நல் வாழ்விற்கும் துணை புரிவதாக அமையும் என திரு நட்டா குறிப்பிட்டுள்ளார்.

*ராம் மோகன் நாயுடு*

ஆந்திர மாநிலம் கோட்டா கொம்மாளி மண்டலத்தில் அரிச்சந்திர புரம் ரயில் நிலையத்தில் விசாகப்பட்டிணம் குனுப்பூர் இடையே சோதனை அடிப்படையில் விரைவு ரயில் நின்று செல்லும் சேவையை தொடக்கி வைத்துப் பேசிய மத்திய சிவில் விமான போக்குவரத்து துறை அமைச்சர் திரு ராம் மோகன் நாயுடு நாட்டில் நிலையான உள்கட்டமைப்பு மற்றும் மேம்பட்ட போக்குவரத்து இணைப்பிற்கு அரசு முன் உரிமை அளித்து வருவதாக தெரிவித்தார். புதிய ரயில் நிறுத்தங்களை அமைக்கவும் பொது போக்குவரத்து உள்கட்டமைப்பை மேம்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளதாக கூறிய அவர் ஒவ்வொரு கிராமத்திற்கும் சிறந்த போக்குவரத்தை உறுதி செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பயணிகளுக்கான வசதிகளை மேம்படுத்தும் வகையில் சூரிய மின் சக்தியை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என கூறி உள்ளார்.

*சிட்டுக் குருவி தினம்*

உலக சிட்டுக் குருவிகள் தினம் இன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்பட்டது. சிட்டுக் குருவிகள் இனத்தை பாதுகாக்கவும், அதனால் சுற்றுச் சூழலுக்கு ஏற்படும் பயன்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் இந்நாள் கடைபிடிக்கப்படுகிறது. இத்தினத்தை முன்னிட்டு மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவ்கான் சிட்டுக் குருவிகளை பாதுகாக்க அனைவரும் முன் வர வேண்டும் என்றும் அதன் எண்ணிக்கை

குறைவது கவலை அளிப்பதாகவும் தமது சமூக வலைதளப் பதிவில் கூறி உள்ளார். சிட்டுக் குருவிகளின் ஒலியை கேட்பதால் மனிதர்களுக்கு மன அழுத்தம் குறைவதாக உளவியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளது குறிப்பிடத் தக்கது.

*ெ□ய்சங்கர்*

மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் இன்று ஆஸ்திரேலிய வெளியுறவுத் துறை அமைச்சர் திருமதி பென்னி ஓங்கை சந்தித்துப் பேசினார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில் மேற்காசியாவில் தற்போது நடைபெற்று வரும் தமது மதிப்பீடுகளை ஆஸ்திரேலிய வெளியுறவு அமைச்சருடன் பகிர்ந்து கொண்டதாக குறிப்பிட்டுள்ளார். இவ்விரு அமைச்சர்களும் இந்தோ-பசிபிக் பிராந்தியம் தொடர்பான விவகாரங்கள் குறித்தும் விவாதித்தனர்.

*கச்சா எண்ணெய்*

நம் நாட்டில் அனைத்து சுத்தி கரிப்பு நிலையங்களிலும் போதுமான கச்சா எண்ணெய் இருப்பு இருப்பதாகவும், அவை அனைத்தும் மிக உயர்ந்த திறனில் செயல்படுவதாகவும் மத்திய அரசு இன்று உறுதி அளித்துள்ளது. உள்நாட்டு எல்பிஜி உற்பத்தி சீராக உள்ளதாகவும், போதுமாக கையிருப்பு உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. புதுடெல்லியில் இன்று நடைபெற்ற அமைச்சகங்களுக்கு இடையிலான சந்திப்பில் உரையாற்றிய பெட்ரோலிய மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் இணை

செயலாளர் திருமதி சுஜாதா சர்மா கூறுகையில் கடந்த ஒரு வாரத்தில் 11 ஆயிரத்து 300 டன் வணிக எல்பிஜி நுகர்வோருக்கு வழங்கப்பட்டுள்ளது என்றார். உள்நாட்டு சமையல் எரிவாயு உற்பத்தி 40 சதவிகிதம் அதிகரித்துள்ளது என்றும் சில்லரை விற்பனை நிலையங்களில் தட்டுப்பாடு ஏதும் இல்லை என்றும் அவர் கூறினார். தேவையில்லாத எல்பிஜி சிலிண்டர் முன் பதிவு தற்போது குறைந்துள்ளதாக தெரிவித்த அவர் கள்ளச் சந்தை மற்றும் பதுக்கல் மீதான அமலாக்க நடவடிக்கை மூலம் 4 ஆயிரத்து 500-க்கும் மேற்பட்ட இடங்களில் சோதனை நடத்தப்பட்டதாகவும் மத்திய இணை செயலாளர் திருமதி சுஜாதா சர்மா தெரிவித்தார்.

*மனுதாக்கல்-முதலமைச்சர்*

புதுச்சேரியில் வரும் ஏப்ரல் மாதம் 9-ஆம் தேதி சட்டமன்ற தேர்தல் நடைபெற இருப்பதை முன்னிட்டு வேட்பு மனு தாக்கல் இம்மாதம் 16-ஆம் தொடங்கி 23-ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. இந்நிலையில் பல்வேறு அரசியல் கட்சிகள் சார்பில் வேட்பாளர்கள் வேட்பு மனு தாக்கல் செய்து வருகின்றனர். இதுகுறித்த ஒரு செய்தி தொகுப்பு........

(வாய்ஸ்)

புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி வருகின்ற சட்டமன்ற தேர்தலில் தட்டாஞ்சாவடி மற்றும் மங்கலம் தொகுதியில் போட்டியிடுவதற்காக வேட்புமனுவை தாக்கல் செய்தார். முன்னதாக புதுச்சேரி கதிர்காமம்

கதிர்வேல் சுவாமி கோவிலில் வேட்புமனுவை வைத்து வழிபட்ட பின்னர் தனது ஆஸ்தான குருவான அப்பா பைத்தியசாமி கோவிலுக்கும் சென்று பூஜை செய்து வழிபட்டார். தொடர்ந்து தட்டாஞ்சாவடி தொகுதியில் போட்டியிடுவதற்காக ஆதிதிராவிட நலத்துறையில் அமைக்கப்பட்டுள்ள அலுவலகத்தில் வேட்பு மனுவை தாக்கல் செய்தார். இதேபோல் மங்கலம் தொகுதியில் போட்டியிடுவதற்காக சாரம் பகுதியில் அமைந்துள்ள பழைய மாவட்ட ஆட்சி அலுவலகத்தில் தனது 2-ஆவது வேட்புமனுவையும் முதலமைச்சர் திரு ரங்கசாமி தாக்கல் செய்தார். இதற்கிடையே, புதுச்சேரி தனியார் உணவகத்தில் மத்திய அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியாவை மரியாதை நிமித்தமாக சந்தித்த முதலமைச்சர் திரு ரங்கசாமி என் ஆர் காங்கிரஸ், பாஜக கூட்டணியை உறுதி செய்தார். இந்த சந்திப்பின் போது பாஜக மாநில தலைவர் திரு ராமலிங்கம் மற்றும் கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர். இதேபோல் தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம் பெற்றுள்ள பாஜக சார்பில் மண்ணாடிப்பட்டு தொகுதியில் போட்டியிட உள்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம் வில்லியனூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார்.

இதேபோல் திமுக சார்பில் வில்லியனூர் தொகுதியில் போட்டியிட எதிர்கட்சி தலைவர் திரு சிவாவும், பாகூர் தொகுதியில் சட்டமன்ற உறுப்பினர் திரு செந்தில்குமார், முத்தியால்பேட்டை தொகுதியில்

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு நந்தா சரவணன் மற்றும் திரு பிரபாகரன் ஆகியோர் வேட்புமனு தாக்கல் செய்துள்ளனர். பாஜக சார்பில் முதலியார்பேட்டை தொகுதியில் அமைச்சர் ஜான்குமாரும், காலாப்பட்டு தொகுதியில் சட்டமன்ற உறுப்பினர் திரு கல்யாண சுந்தரம், ஆகியோரும் மனுதாக்கல் செய்துள்ளனர். என் ஆர் காங்கிரஸ் கட்சி சார்பில் திருபுவனைத் தொகுதியில் திருமதி கோபிகாவும், நெட்டப்பாக்கம் தொகுதியில் துணை சபாநாயகர் திரு ராஜவேலுவும் மனு தாக்கல் செய்துள்ளனர்.

*காரைக்கால்*

புதுச்சேரி சட்டமன்ற தேர்தல் 2026-ஐ முன்னிட்டு காரைக்கால் மாவட்டத்தில் 100 சதவிகித வாக்குப் பதிவை வலியுறுத்தி SVEEP குழு சார்பில் எல்இடி தகவல் பலகைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் **நமது வாக்கு நமது உரிமை, வாக்கு விற்பனைக்கு அல்ல,** மற்றும் தேர்தல் புகார்களுக்கான 1950 உதவி எண் போன்ற வழிப்புணர்வு வாசகங்கள் பொது மக்கள் அறியும் வண்ணம் பகல் மற்றும் இரவு நேரங்களில் ஒளிபரப்பப்படுகின்றன. மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கடற்கரை சாலை உள்ளிட்ட முக்கிய இடங்களில் வைக்கப்பட்டுள்ள இந்த தகவல் பலகைகளை மாவட்ட தேர்தல் அதிகாரியும், மாவட்ட ஆட்சியருமான திருமதி இஷிதா ராட்டி இன்று தொடக்கி வைத்தார். இந்த நிகழ்வின் போது

காரைக்கால் மாவட்ட SVEEP ஒருங்கிணைப்பாளர் முனைவர் தாமோதரன் மற்றும் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

*காரைக்கால் கண்காணிப்புக் குழு*

இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின் படி தேர்தல் செலவின பார்வையாளர் திரு பியூஷ்குமார் அங்கித் இன்று காரைக்காலில் மாவட்ட ஊடக சான்றளிப்பு மற்றும் கண்காணிப்பு அலுவலகத்தை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது ஊடகங்களில் வெளியாகும் தேர்தல் தொடர்பான உள்ளடக்கங்கள் மற்றும் டிஜிட்டல் பிரச்சார பதிவுகள் எவ்வாறு கண்காணிக்கப்படுகின்றன என்பதை விரிவாக கேட்டறிந்தார். தேர்தல் ஆணையம் வகுத்துள்ள நடைமுறைகளை எவ்வித சுணக்கமும் இன்றி துல்லியமாக பின்பற்ற வேண்டும் என்று அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தினார். மேலும் வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகள் சமூக ஊடகங்களில் வெளியிடும் விளம்பரங்களுக்கு கட்டாயம் முன் சான்றிதழ் பெற வேண்டும் என குறிப்பிட்ட அவர் தேர்தல் செலவின கண்காணிப்பு அணியுடன் இணைந்து ஊடக செலவுகளை துல்லியமாக பதிவு செய்து தேர்தல் செயல்முறையின் நம்பகத் தன்மை உறுதி செய்ய வேண்டும் என வலியுறுத்தினார்.

*கோயல்*

இந்த மாதம் வரும் 26-ஆம் தேதி முதல் 29-ஆம் தேதி வரை கேமரூனில் நடைபெற உலக வர்த்தக அமைப்பின் 14-ஆவது அமைச்சர்கள்

மாநாட்டின் இந்திய குழுவிற்கு மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தலைமை தாங்குகிறார்.

பல்வேறு புவிசார் அரசியல் காரணிகளால் உலகம் தற்போது நிலையற்ற சூழலை எதிர்கொண்டு வரும் வேளையில் உலகளாவிய வர்த்தகத்தை மேம்படுத்துவதில் உலக வர்த்தக அமைப்பு முக்கிய பங்காற்ற வேண்டும் என்பதற்காக அம்மாநாட்டில் இந்தியா வலியுறுத்தும் என்று மத்திய வர்த்தக அமைச்சகத்தின் அதிகாரப் பூர்வ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. மின்னணு வர்த்தக பரிமாற்றங்கள் மீதான 28 ஆண்டுகால தடையை நீட்டித்தல் மீன்வள மானியங்கள் மற்றும் மேம்பாட்டிற்கான முதலீட்டு வசதி ஒப்பந்தம் குறித்த முன் மொழிவு உள்ளிட்ட பிற முக்கிய விவகாரங்களையும் இந்தியா இம்மாநாட்டில் முன்னெடுத்து பேச உள்ளது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் தரமான மருத்துவ சேவை கிடைப்பதை உறுதி செய்ய மத்திய அரசு செயலாற்றி வருவதாக குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு தெரிவித்துள்ளார்.

விவசாயிகளின் விளை பொருட்களை குறைந்த பட்ச ஆதரவு விலையில் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவ்கான் தெரிவித்துள்ளார்.

நம் நாட்டில் அனைத்து சுத்தி கரிப்பு நிலையங்களிலும் போதுமான கச்சா எண்ணெய் இருப்பு இருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

புதுச்சேரியில் முதலமைச்சர் திரு ரங்கசாமி 2 இடங்களில் போட்டியிடுவதற்காக தனது வேட்புமனுவை இன்று தாக்கல் செய்தார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 20.3.2026/Script.

---------------------------------------------